# தேவகோட்டை நகராட்சி.
## <u>அவசரக்கூட்டம்.</u>

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 10.01.2023–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகர்மன்றம்.**

### பொருள் – 184

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட இராம்நகர் அழகாபுரி நகரில் நகராட்சிக்கு சொந்தமான அழகப்பா ஊரணி பூங்கா உள்ளது. தினமும் ஏராளமானோர் காலையும் மாலையும் நடைபயிற்சிக்கும், பொழுதுபோக்கவும் இப்பூங்காவிற்கு வந்து செல்கின்றனர். கடந்த சில வருடங்களாக எவ்வித பராமரிப்பு பணியும் மேற்கொள்ளப்படாததால் இப்பூங்காவினுள் உள்ள விளக்குகளில் பல விளக்குகள் எரியாமல் உள்ளன. இதனால் அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் இப்பூங்காவிற்கு வர பொதுமக்கள் அச்சப்படும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட எரியாத விளக்குகளை அகற்றி புதிதாக விளக்குகள் பொருத்தவும் மற்றும் இருள் சூழ்ந்த இடங்களில் புதிதாக கம்பம் ஊன்றி விளக்குகள் அமைக்கவும் வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/– இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணிக்கும் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 184 – அனுமதிக்கப்பட்டது.**

––

### பொருள் – 185

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பு இன்றி சுற்றித்திரியும் 300 தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்தும் மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி போடவும் இந்நகர்மன்ற தீர்மான எண்.48, நாள் 08.07.2022ன்படி மன்ற அனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதில் மிக குறைந்த விலைப்புள்ளியான விவேகா அறக்கட்டளை தேவகோட்டை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 185 – அனுமதிக்கப்பட்டது.**

––

### பொருள் – 186

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூராக சுற்றித்திரியும் கால்நடைகள் மற்றும் வீட்டு வளர்ப்பு விலங்குகள் தெருக்களிலும் மற்றும் பிரதான சாலைகளிலும் விடுவதை தவிர்க்க இந்நகராட்சி பணியாளர்கள் மூலம் பிடிக்கப்பட்டு முதல் முறைக்கு தண்டத்தொகை ரூ.1000/– விதிக்கவும், இரண்டாவது முறைக்கு ரூ.5000/– விதிக்கவும், மூன்றாவது முறையாக தெருவில் விட்டால் பறிமுதல் செய்து பொது ஏலம் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 186 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 187</u>

தேவகோட்டை நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து இடையூராக கேட்பாரின்றி சுற்றித்திரியும் பன்றிகளால் பொதுசுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதால் பன்றிகளை பிடித்து நகர் எல்லைக்கு அப்பால் கொண்டு செல்வதற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 187 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 188</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பொதுசுகாதாரப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN63 AR5171 TATA ACE வாகனம் இஞ்சின், கியர்பாக்ஸ் கிரவுன் போன்றவற்றில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், பழுதுகளை சரிசெய்யவும் பாடி வேலைகள், டிங்கர் வேலைகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,50,000/– செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.
**தீர்மானம் 188 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 189</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நகரைச்சுற்றி ஆங்காங்கே 53 எண்ணங்கள் சிறுமின்விசை மோட்டார் உடன் ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து குடிநீர் தொட்டி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த சிறுமின்விசை மோட்டார்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டு இயங்காத சமயங்களில் உடனடியாக ஆழ்துளைக் கிணற்றிலிருந்து வெளியெடுத்து மாற்று மோட்டார் பொருத்தி இயக்குதல் வழக்கம். மேலும் பழுதடைந்துள்ள மோட்டர்களை பழுது நீக்கி உபயோகப்படுத்துவதுமுண்டு. இந்நிலையில் தற்பொழுது பழுது நீக்கம் ஏற்பட்டு வெளியெடுத்த

மோட்டார்களில் பெரும்பாலானவை நீண்ட காலமாக உபயோகத்தில் இருந்தாலும் ஏற்கனவே பலமுறை பழுதுநீக்கி இயக்கிய காராணத்தாலும் முற்றிலும் உபயோகமுற்ற நிலையில் உள்ளது. மேலும் மாற்று மோட்டார் ஏதும் கைவசம் இல்லாத காரணத்தால் புதிய மோட்டார்கள் வாங்கி இருப்பில் வைத்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. பொதுமக்களுக்கு தங்குதடையின்றி தண்ணீர் வழங்க வேண்டியது அத்தியாவசியம் என்பதால் மேற்காணும்படி புதிதாக 1 HP முதல் 1.5 HP திறனுள்ள சிறுமின்விசை மோட்டார் பம்புகள் (Spare Motor) வாங்குவதற்கு ரூ.9,90,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 189 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 190</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வழியாக 140 கி.மீ நீளம் பகிர்மான குழாய் வழியாக PVC குழாய், AC குழாய் மற்றும் DI குழாய் வழியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதில் அவ்வப்போது ஏற்படும் அடைப்பு, உடைப்புகளை சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு டிசம்பர் 2022 வரை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி முடிவுறுவதாலும். மேலும் குடிநீர் விநியோகத்திற்கு உள்ள ஆழ்துளைக்கிணறுகளால் உள்ள மின் விசைப்பம்புகள் நீரேற்றிகள் மூலம் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து மோட்டார் தூக்கி பழுது நீக்கி மீண்டும் இறக்கி இயக்குதல் பணிக்கும் டிசம்பர் 2022 வரை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி முடிவுறுவதாலும் இப்பணிகள் குடிநீர் பணிகள் என்பதால் இப்பணிகளை மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு ரூ.12.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 190 – அனுமதிக்கப்பட்டது.**

––

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்**
**தேவகோட்டை நகராட்சி.**